செய்தி வெளியீடு எண்: 181 நாள்: 10.03.2018

## செய்தி வெளியீடு

காவேரி நடுவர் மன்றம் 5.2.2007 அன்று பிறப்பித்த இறுதி ஆணையினை எதிர்த்து, கர்நாடகா மற்றும் கேரளா அரசுகள் உச்ச நீதிமன்றத்தில் சிவில் மேல்முறையீட்டு மனுக்களை தாக்கல் செய்தன. தமிழ்நாடு அரசும் ஒரு சில பாதகமான அம்சங்களை நீக்கக் கோரி, உச்ச நீதிமன்றத்தில் ஒரு சிவில் மேல்முறையீட்டு மனுவை தாக்கல் செய்தது. இதனை விசாரித்த உச்ச நீதிமன்றம், 16.2.2018 அன்று தீர்ப்பு வழங்கியது. இந்தத் தீர்ப்பில், காவேரி நடுவர் மன்ற இறுதி ஆணையில் குறிப்பிட்டுள்ளவாறு, காவேரி மேலாண்மை வாரியம் மற்றும் காவேரி நீர் முறைப்படுத்தும் குழு ஆகிய அமைப்புகளை மத்திய அரசு ஆறு வார காலத்திற்குள் அமைக்க வேண்டும் எனவும், காலக்கெடு ஏதும் நீட்டிக்கப்பட மாட்டாது எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

உச்ச நீதிமன்றத்தின் 16.2.2018ஆம் நாளிட்ட தீர்ப்பின் மீது தமிழ்நாடு அரசு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து, அனைத்துக் கட்சிகள் மற்றும் விவசாய சங்கங்களின் பிரதிநிதிகள் கூட்டம் 22.2.2018 அன்று நடத்தப்பட்டது. அக்கூட்டத்தில், காவேரி நடுவர் மன்ற இறுதி ஆணை மற்றும் உச்ச நீதிமன்றத் தீர்ப்பின்படியும், அனைத்து அதிகாரங்களும் கொண்ட காவேரி மேலாண்மை வாரியம் மற்றும் காவேரி நீர் முறைப்படுத்தும் குழு ஆகிய அமைப்புகளை 16.2.2018லிருந்து ஆறு வாரத்திற்குள் மத்திய அரசு அமைக்க வேண்டும் என ஒருமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. மேலும், 24.2.2018 அன்று மாண்புமிகு அம்மா அவர்களின் பிறந்த தினத்தில் மானிய விலையில் மகளிருக்கு அம்மா இருசக்கர வாகனம் வழங்கும் திட்ட துவக்க விழாவிற்கு வருகை தந்த மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களிடம் காவேரி மேலாண்மை வாரியம் மற்றும் காவேரி நீர் முறைப்படுத்தும் குழு ஆகியவற்றை உச்ச நீதிமன்றத் தீர்ப்பின்படி,

உரிய காலத்திற்குள் அமைத்துத் தருமாறு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நேரில் கேட்டுக் கொண்டார்கள். அதன் தொடர்ச்சியாக, 25.2.2018 அன்று மாண்புமிகு மத்திய சாலைப் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் துறைமுகம், நீர்வள ஆதாரம், நதி மேம்பாடு மற்றும் கங்கை புனரமைப்பு அமைச்சர் அவர்கள் சென்னைக்கு வந்தபோது, அவரிடம் இதனையே வலியுறுத்தி நேரில் கடிதம் அளிக்கப்பட்டது. மேலும், மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கு அனைத்துக் கட்சி பிரதிநிதிகள், விவசாய சங்கங்களின் பிரதிநிதிகள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் நேரில் சந்தித்து மேற்கண்ட கோரிக்கையினை வலியுறுத்த நேரம் கேட்டு கடிதமும் அனுப்பப்பட்டது.

உச்ச நீதிமன்றத் தீர்ப்பின்படி, காவேரி நடுவர் மன்ற இறுதி ஆணையினை செயல்படுத்துவது குறித்து மத்திய நீர்வள ஆதாரத் துறை செயலாளர், 9.3.2018 அன்று புது டெல்லியில் தமிழ்நாடு, கர்நாடகா, கேரளா மற்றும் புதுச்சேரி மாநில தலைமைச் செயலாளர்கள் மற்றும் நீர்வள ஆதாரத் துறை செயலாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டு தங்களது மாநிலங்களின் கருத்துக்களை தெரிவிக்குமாறு 5.3.2018 நாளிட்ட கடிதம் வாயிலாக கேட்டுக் கொண்டார்.

மத்திய அரசு கூட்டியுள்ள கூட்டத்தில், தமிழ்நாடு அரசு சார்பில் எடுத்துரைக்கப்பட வேண்டிய தமிழ்நாட்டின் நிலை குறித்து விவாதிக்க, மாண்புமிகு முதலமைச்சர் தலைமையில், மாண்புமிகு அமைச்சர்கள் மற்றும் அரசு உயர் அதிகாரிகளுடன் 7.3.2018 அன்று கலந்து ஆலோசிக்கப்பட்டது. மத்திய அரசு கூட்டியுள்ள கூட்டத்தில், உச்ச நீதிமன்றத் தீர்ப்பின்படியும், காவேரி நடுவர் மன்ற இறுதி ஆணையின்படியும், அனைத்து அதிகாரங்களும் கொண்ட காவேரி மேலாண்மை வாரியம் மற்றும் காவேரி நீர் முறைப்படுத்தும் குழுவை, உச்ச நீதிமன்றம் குறிப்பிட்டுள்ள ஆறு வார காலக் கெடுவுக்குள் மத்திய அரசு

அமைப்பதற்கு வலியுறுத்த வேண்டும் என மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்கள்.

காவேரி நடுவர் மன்ற தீர்ப்பு மற்றும் ஆணைகளை செயல்படுத்துவதற்கு ஒரு ‘‘திட்டத்தை’’ (scheme) ஆறு வார காலத்திற்குள் மத்திய அரசு அமைக்க வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. உச்ச நீதிமன்றம் குறிப்பிட்டுள்ள ‘‘திட்டம்’’ என்னவென்பதை 1956ஆம் ஆண்டைய பன்மாநில நதிநீர் தாவா சட்டம் பிரிவு 6(A)(2)ல் தெளிவாக வரையறுக்கப்பட்டுள்ளது. இதன்படி, ‘‘திட்டம்’’ என்பது, நடுவர் மன்ற இறுதி ஆணையையும், தற்போது உச்ச நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பையும் செயல்படுத்த ஒரு அமைப்பை ஏற்படுத்த வேண்டும் என்றும், அந்த அமைப்பின் உறுப்பினர்கள், அதிகார வரம்புகள் மற்றும் செயல்பாடுகள் ஆகியன வரையறுக்கப்பட வேண்டும் என்றும் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த நிலையில், உச்ச நீதிமன்றம், அதன் 16.2.2018 நாளிட்ட தீர்ப்பில், பத்தி 397ல், நீர்ப் பங்கீட்டில் மாற்றம் செய்யப்பட்டதைத் தவிர, காவேரி நடுவர் மன்ற இறுதி ஆணையில் குறிப்பிடப்பட்டுள்ள இதர இனங்களில் மாற்றம் ஏதும் தேவையில்லை என்று தெளிவாக குறிப்பிட்டுள்ளது. இது தவிர, பத்தி 399ல், காவேரி நடுவர் மன்றம், நீர் முறைப்படுத்தும் குழு சம்பந்தப்பட்ட மாநிலங்கள் மற்றும் மத்திய நீர்வளக் குழுமம் ஆகியவற்றின் உதவியோடு நீர் விடுவிப்பதை மாதாந்திர வாரியாக கண்காணிக்க வேண்டும் என்றும் உச்ச நீதிமன்றம் குறிப்பிட்டுள்ளது.

மேற்கண்ட தீர்ப்பின்படி, உச்ச நீதிமன்றம் குறிப்பிட்ட ‘‘திட்டம்’’ என்பது, காவேரி நடுவர் மன்ற இறுதி ஆணையில் குறிப்பிட்டுள்ள காவேரி மேலாண்மை வாரியம் மற்றும் காவேரி நீர் முறைப்படுத்தும் குழு தான் என்றும், அவ்வாணையில் அதிகார வரம்புகளுடன் இவ்வமைப்புகள் அமைக்கப்பட வேண்டும் என்றும் தெளிவாக உள்ள நிலையில், காவேரி மேலாண்மை வாரியத்தை, காவேரி நடுவர் மன்ற இறுதி ஆணையில் குறிப்பிட்டுள்ளவாறு அமைப்பதைத் தவிர மத்திய

அரசுக்கு வேறு மாற்று வழி இல்லை என தமிழ்நாடு அரசின் சார்பில் தெளிவுபடுத்தப்பட்டது. எனவே, உச்ச நீதிதின்றத் தீர்ப்பில் குறிப்பிடப்பட்டுள்ளபடி, ஆறு வார காலத்திற்குள் மத்திய அரசு காவேரி மேலாண்மை வாரியத்தை உடனடியாக அமைக்க வேண்டும் எனவும் தமிழ்நாடு அரசின் சார்பாக வலியுறுத்தப்பட்டது. மத்திய அரசின் சார்பில் **9.3.2018** அன்று கூட்டப்பட்ட கூட்டத்தில், மேற்கண்ட கருத்துக்கள் மிகத் தெளிவாக எடுத்துரைக்கப்பட்டன.

காவேரி மேலாண்மை வாரியம் மற்றும் காவேரி நீர் முறைப்படுத்தும் குழு ஆகியவற்றை உச்ச நீதிமன்ற தீர்ப்பின்படி, ஆறு வார காலத்திற்குள் அமைக்க வேண்டும் என மத்திய அரசை வலியுறுத்தி, நாடாளுமன்றத்தில் தமிழ்நாட்டைச் சேர்ந்த அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்கள் தொடர்ந்து போராடி வருகின்றனர்.

காவேரி நதிநீர் பிரச்சனையில், தமிழ்நாட்டின் உரிமைகளை நிலைநாட்டவும், காவேரி நீரை ஆதாரமாகக் கொண்ட தமிழ்நாடு வேளாண் பெருங்குடி மக்களின் நலன்களைப் பேணிப் பாதுகாப்பதற்கும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாவின் வழியில் செயல்படும் அம்மாவின் அரசு அனைத்து நடவடிக்கைகளையும் உறுதியாக தொடர்ந்து மேற்கொள்ளும்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**